# வடக்கு கிழக்கிலுள்ள காடுகள் அழிவதால் சூழல் வெப்பநிலை அதிகரிக்கும் அபாயம்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருவதால் இப் பகுதிகளின் சூழல் வெப்பம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப் படுகின்றது. இலங்கையின் காட்டுவளத்தில் குறிப்பிட்டளவு பங்கு வகிக்கும் அயனமண்டல பருவக் காற்றுக் காடுகள் என்ற வகையினுள்ளே வடக்கு கிழக்கு பகுதிக்காடுகள் கூடுதலாக அடங்குகின்றன. இக் காடுகள் வேகமாக அழிந்து வருவதால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் மழை வீழ்ச்சி பாதிப்படைந்து வருவதோடு இப்பகுதிகள் வெப்பமடைந்தும் வருகின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கிளிநொச்சி மீள்வளமாக்கல் திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளது இத் திட்டங்கள் தொடரப்படாதுவிட்டால் எமது பிரதேசம் பாரிய வரட்சியை எதிர்நோக்குமென அஞ்சப்படுகின்றது. (03)

பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 3-00
முரசொலி
முரசு 04 ஒலி 61 வெள்ளி 06-04-1990 (பங்குனி 24) ரமழான் 09

LIBRARIAN
PUBLIC LIBRARY
JAFFNA

# விடுதலைப் புலிகள் ஆயுதபலம் உண்மையில் நாம் அறியோம்

## -இணைபாதுகாப்பு மந்திரி ரஞ்சன்

"விடுதலைப்புலிகளின் ஆயுத பலம் பற்றி வெளிப்படையாக சொல்வதானால் எமக்கு எதுவும் தெரியாது என்றே கூறவேண்டும்" இவ்வாறு பெருந் தோட்ட தொழில் துறை பாது காப்பு இணையமைச்சர் திரு.ரஞ்சன்விஜேரட்ன நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளிடம் உள்ள ஆயுதங்கள் பற்றி அரசாங்கம் அறிந்துள்ளதா? என அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இப்படிப் பதிலளித்தார்,

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் அவசரப்படுவதற்கு எதுவுமில்லை. ஆயுதங்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் மட்டுமே வைத்திருக்க முடியும். எனினும் புலிகளின் ஆயுத விடயத்தில் அரசு எந்தவித அவசர முடிவுகளையும எடுக்க மாட்டாது என அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார்.

வட, கிழக்கு, மாகாண சபையை கலைப்பது குறித்து நிருபர் ஒருவர் கேட்டபோது 'ஜனாதிபதி சரியான நேரத்தில அரசியல் யாப்பின்படி தகுந்த நடவடிக்கையை எடுப்பார்' எனக் குறிப்பிட்ட அமைச்சர்

—8-ம் பக்கம் பார்க்க

### திருமலை டிப்போவுக்கு

## ரூ 3 இலட்சம் பெறுமதியான டயர், டியூப், பற்றறிகள்

திருகோணமலை டிப்போவுக்குவடக்கு, கிழக்குமாகாண ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனிவிரத்னவின் அவசர கோரிக்கையை அடுத்து போக்குவரத்து அமைச்சர் திரு, விஜயபாலமென்டிஸ் 3இலட்ச ரூபா பெறுமதியான டயர், டியூப், பற்றறி போன்றன வழங்கியுள்ளார்.

இதன் பலனாக 6 பஸ்கள் உடனடியாகச் சேவைகளில் ஈடுபடுத்தப்படும்.

இரண்டாவது தடவையாக ஆளுநர் அண்மையில் திருகோணமலை டிப்போவுக்குச் சென்று அங்கு நிலவும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

— 8 ஆம் பக்கம் பார்க்க

### சலுகை வாகனங்களை அதிக விலைக்கு விற்று

## அரசை ஏய்த்துப் பிழைக்கும் எம். பிக்கள் மீது நடவடிக்கை

"பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு சலுகை அடிப்படையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாகனங்கள் கூடுதல் விலைக்கு வெளியாருக்கு விற்கப்படுவதாக ஜனாதிபதிக்குப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இது குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது." என்று பெருந் தோட்டத் தொழில் துறை பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்றைய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"மேற்படி வாகனங்கள்

–8 ஆம் பக்கம் பார்க்க

## ரோஹண விடுதலையில் மெஹோத்ரா மகிழ்ச்சியில்லை

முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்தியை அவரது இலங்கை விஜயத்தின் போது தாக்கியதான குற்றச்சாட்டின் பேரில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த கடற்படை வீரர் விஜயமுனிகே ரோஹண டி. சில்வா ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளது குறித்து இலங்கைக்கான இந்தியத்தூதுவர் திரு. மெஹோத்ரா கருத்து வெளியிட்டுள்ளார் ரோஹண டி. சில்வாவை விடுதலை செய்தது ஜனாதிபதி திரு. பிரேமதாஸவின் தனிச்சிறப்புரிமை என்பது மட்டுமல்ல இலங்கை

8ப் பக்கம் பார்க்க

### தமிழீழ மக்கள் தமது

## சுதந்திரமான கருத்துக்களை அபிப்பிராய பெட்டியில் இடவும்

தமிழீழ மக்களிடம் இருந்து ஆக்கபூர்வமான, அர்த்தமுள்ள கருத்துக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்பார்ப்பதாக விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட தளபதி திரு பானு தெரிவித்துள்ளார்.

— 8-ம் பக்கம் பார்க்க

### பணிப்பாளர் அறிவுறுத்து

## லீவு நாளில் அதிகாரிகள் வீடு தேடிச் செல்லாதீர்

கல்வித்திணைக்கள அதிகாரிகளை விடுமுறை நாட்களில் எவரும் வீட்டிற்குச் சென்று சந்திக்க வேண்டாம் என்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இரா.சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். அவர்களை அலுவலகத்தில் சந்திப்பதே சாலச் சிறந்தது எனவும்

—8-ம் பக்கம் பார்க்க

## உடுவில் உ. அ. அ. பிரிவுக்கு மக்கள் வங்கியில் நிவாரணம்

உடுவில் அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கீழ் கண்ட பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மீளக் குடியமர்வு கொடுப்பனவு ஆயிரம் ரூபா ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் 7-ம் 8-ம் 9-ம் திகதிகளில் வழங்கப்படவுள்ளது.

ஏழாலை தெற்கைச் சேர்ந்த

—8 ஆம் பக்கம் பார்க்க

## 1987 ஜுலை மாதத்தின் முன் பாதிப்படைந்த அரச ஊழியர்கள் நஷ்டஈடு பெறுவதில் சிக்கல்

வன்செயல்களினால் பாதிப்படைந்த அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டத்தில 1987 ஜுலை மாதத்தின்பின் பாதிப்படைந்தவர்களுக்கே நஷ்டஈடு வழங்கும்படி அரசு அறிவித்துள்ளது. இதனால் 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின்பின்னர் இடம்பெற்ற வன்செயல்களில் பாதிப்படைந்தோர் பாதிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மற்றைய நிவாரணங்கள் நன்கொடைகள், போன்றவை 1983 ஜுலை மாதத்தின் பின் பாதிப்படைந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதுபற்றி யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது (03)

# 2000 பஸ்கள் பழுது; 750 உடன் திருத்தப்படும்

இயங்காத நிலையிலுள்ள சுமார் இரண்டாயிரம் பஸ்களை திருத்தியமைக்க இலங்கை மத்திய போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதில் உடனடியாக எழுநூற்றைம்பது பஸ்களை திருத்தியமைத்து தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு முன்பு சேவையிலீடுபடுத்த ஜனாதிபதி ஆர் பிரேமதாஸ பணிப்புரை விடுத்துள்ளார் இதற்காக நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## யாழ் விவசாய நிலையங்களில்

# நல்லினத் தென்னங்கன்று விரைவில் கிடைக்கும்

யாழ். கமநலச்சேவைத் திணைக்களம் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கு முகமாக யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு நல்லினத்தென்னங்கன்றுகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள கமநலச்சேவை நிலையங்கள் மூலம் இத்தென்னங் கன்றுகள் விரைவில் விநியோகம் செய்யப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (36)


# பனை அபிவிருத்திச் சபை

## பனை வளத் தொழிற்பாட்டுக் கண்காட்சி

எதிர்வரும் மே மாதத் தொடக்கத்தில் யாழ் நகரில் பனைவளத் தொழிற்பாட்டுக் கணகாட்சி ஒன்று நடைபெறவுள்ளது. பனையின் சமூக, பொருளாதார முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதாக இருக்கும் இக் கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்புகின்ற பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு கைப் பணி, மற்றும் கைத்தொழிலில் ஈடுபட்டுவரும் ஸ்தாபனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள், தனியார் ஆகியோர், பெ துமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை
C4047



# பிரயாண ஒழுங்குகள்

★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

★ ஈராக் (அரசாங்க வைத்தியசாலை)

ஈராக் நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | ஆங்கில வைத்தியர் | — (2) | I.D 250 |
| 02. | ஆண் தாதி (மேல் நேர்ஸ்) | — (4) | I.D 140 |
| 03. | தொழிலாளர் | — (40) | I.D 80 |

5வருட ஒப்பந்தம் உணவு இருப்பிடம் வைத்தியம் இலவசம்

V.T.R. TRAVELS
41, 3rdCross Street Jaffna:

04040



# முக்கிய அறிவித்தல்

## யாழ்மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்க பொதுக்கூட்டம்

சகல பேக்கறி உரிமையாளர்களின் கவனத்திற்கு-
பாணின் விலை, நிறை ஆகியவை சம்பந்தமாக சங்கத்தின் மூலம் சில முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதானால் சகலரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

காலம்: 09-04-1990 திங்கட்கிழமை காலை 10.30
இடம்: சென் ஜேம்ஸ் ஆலயம் (பிறிமியர் பேக்கறி முன்பாக)
பிரதான வீதி; யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
நிர்வாகி

04052


# இடமாற்ற சபை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமசேவை அலுவலர்களின் இடமாற்றங்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு 'இடமாற்ற சபை' ஒன்று நிறுவப்படும்.

கிழக்கிலங்கைக் கிராம சேவை அலுவலர் சங்க பிரதிநிதிகள் அரசாங்க அதிபர் திரு. ஆர் லோகநாதனை அவரது [illegible] வலகத்தில் கடந்த வார இறுதியில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போதே அரசாங்க அதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த இடமாற்ற சபையில் கிழக்கிலங்கைக் கிராம சேவை அலுவலர் சங்கப் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள் என இச் சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டது.

அரசாங்க அதிபரிடம் மேற்படி பிரதிநிதிகள் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

அரசாங்க செயலகத்தில் கிராமசேவை அலுவலர்களின் விடயங்களைக் கையாள்வதற்குத் தனியான பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டும் எனவும் கிழக்கிலங்கைக் கிராம சேவை அலுவலர் சங்கத்திற்கு மட்டக்களப்பு நகரில் காணி ஒன்று ஒதுக்கித் தருமாறும் கோரினர்.

இச் சந்திப்பில் கிழக்கிலங்கைக் கிராமசேவை அலுவலர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர். திரு எஸ் சுப்பிரமணியம், செயலாளர்: திரு ஏ.ஜே. மங்களராஜ். பொருளாளர்: திரு. பத்துநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

## புதுவருடத்தினத்தன்று

# வங்கி வாடிக்கையாளர்க்கு 'கைவிசேஷம்' கிடைக்கும்

கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளை புதுவருடத் தினத்தன்று சமுகமளிக்கும் வாடிக்கையாளர்களுக்கு ''கைவிசேஷம்'' வழங்கத் தீர்மானித்துள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டு புதுவருட தினமான 14-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை புதிதாகக் கணக்குத் திறப்பவர்களுக்கும், ஏற்கனவே கணக்கு வைத்திருந்து அன்றைய தினம் முதலீடு செய்பவர்களுக்கும் ''கைவிசேஷம்'' வழங்கத் தீர்மானித்திருப்பதாக மேற்படி வங்கிக்கிளை முகாமையாளர் எம். தியாகராஜா தெரிவித்துள்ளார்.

புதுவருடத் தினத்தன்று ''கைவிசேஷம்'' வழங்கும் நிகழ்ச்சியை ஒரு விசேட வைபவமாக நடாத்தத் தீர்மானித்திருப்பதாகவும் 1983-ம் ஆண்டுக்கு முன்னர் இது போன்ற நிகழ்ச்சி வங்கிகளில் நடந்ததாகவும் 1983-ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வங்கிக்கிளையில் முதன் முதலாக இவ்வாண்டு நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (12)

# கடற்றொழில் உபகரணங்களை அகதிகள் நிறுவனம் வழங்கியது

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கட்டைக்காடு சென் மேரீஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை வழங்கியுள்ளது

மிகவும் வறிய நிலையிலுள்ள சங்க அங்கத்தவர்கள் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூபா ஐயயிரம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படும், வட்டியற்ற இக்கடன் ரூபா ஐயாயிரத்தையும் 25 மாதத்தவணையில் சங்கம் ஊடாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துக்கு மீண்டும் செலுத்த வேண்டும். (18)

# தபால் விநியோகிக்க மாற்று ஏற்பாடு

வடபகுதிக்கான இரவு மெயில் ரயில் நிற்காத புகையிரத நிலையம் உள்ள பகுதிகளுக்கு யாழ் பிரதமதபாலகத்தினூடாகவே தபால் பொதிகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப் புகையிரத நிலையங்கள் திருத்தப்பட்டபின்னரே இரவு மெயில் ரயில் சகல புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்படும். இதன்பின்னரே இப் பகுதிகளுக்கான தபால் நேரடியாக விநியோகிக்கப்படும். (3

# அமைச்சு நடவடிக்கை

கல்வி அமைச்சின் சகல நடவடிக்கைகளும் இனிமேல் தமிழ் மொழியிலும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது இதனை செயற்படுத்துவதற்கான பொறுப்புகள் யாவும் கல்வி இராஜாங்க அமைச்சினால் திருமதி இராஜமனோகரி புலேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சகல கருமங்களும் தமிழ் மொழியிலும் இடம் பெறுவதற்கான வேலைத்திட்டமொன்றை வகுத்து அதைச் செயல்படுத்தும் பொறுப்பை உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி திருமதி புலேந்திரனிடம் ஒப்படைத்துள்ளார்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிசில் டீப் பிறீஸர் (SISIL DEEP FREEZER) விற்பனைக்கு உண்டு. மேல் விபரங்களுக்கு பற்றிமா ஸ்ரோஸ் மெயின் வீதி, மாதகல்.

(04045)



## மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து, கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|---|
| 1. | யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளை | (15. 10. 89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | | |
| | 31. 03 83வரை அடகு வைத்தவர்கள். — | | 06 04. 90 | வெள்ளி |
| | 31. 03. 83ன் பின்பு அடகு வைத்தவர்கள் — | | 07. 04. 90 | சனி |
| 2. | யாழ்/பிரதான வீதிக் கிளை புங்குடுதீவுக் கிளை. | (12. 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07. 04. 90 | சனி |
| 3. | யாழ்/கன்னாதிட்டிக் கிளை சங்கானைக் கிளை. | (12. 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07. 04. 90 | சனி |
| 4. | யாழ்/நவீன சந்தைக் கிளை | (12. 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06. 04. 90 | வெள்ளி |
| 5. | சாவகச்சேரிக் கிளை பளைக் கிளை | (15. 10. 89வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06. 04 90 | வெள்ளி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 1.00மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமூகம் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

04054

# இதயநாதம்

வெள்ளிக்கிழமை 06—04—1990

### நல்வாக்கு

ஆண்டவன் ஒருவனைத்தவிர குற்றங் குறைகளே அற்றவரென்று வேறு எவரையும் சொல்வதற்கில்லை; அதேவகையில் இவ்வுலகில் குற்றமே உருவானவன் எனத்தக்கவனும் எவனும் இல்லை.

-மகாபாரதம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## மக்கள் நெரிசலும் போக்குவரத்து ஒழுங்கும்

யாழ்.நகரில் இருந்து இந்தியப்படை வெளியேறியதும் ஏற்பட்ட அமைதி நிலையை அடுத்து, யாழ்.நகர் புதிதாய் களைகட்டியது.

புற்றீசலைப்போல் மக்கள் கூட்டம் நகருக்குள் பிரவேசிக்கத் தொடங்கியது. ஆண்களும், பெண்களுமாக அதிகாலை தொடக்கம் மாலைவரை நகரை ஆக்கிரமிக்கத் தொடங்கியதும்-

கலகலப்பு ஏற்பட்டது என்று சொல்வதற்குப் பதில் நெரிசல் காரணமாக வீதிகள் தோறும் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டது என்று சொல்வதே பொருந்தும்.

சொந்த மண்ணில் நடமாடப் பயந்து வீடுகளில் முடங்கிக் கிடந்தும், கொழும்பில் ஒளிந்திருந்தும் நாட்களைக் கழித்த மாணவர்கள், இளைஞர்கள் எல்லோரும் ஏதோ சுதந்திரம் கிடைத்துவிட்டதைப் போன்ற உணர்வுடன் வீதிகளில் நடமாடுகிறார்கள் என்று சொல்வதைவிட, சைக்கிள்களில் கை கோர்த்தபடி வீதிகளில் உலாவி வீதி ஒழுங்கைக் குழப்புகிறார்கள் என்று கூறுவதே பொருந்தும்.

இக்காலகட்டத்தில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கின்மையாலும், அதிகமான சனநெரிசல், வாகனப்போக்குவரத்துகள் காரணமாகவும் பல விபத்துக்கள் ஏற்பட்டன.

ஒருவழிப் பாதைகள், இருவழிப் பாதைகளாகப் பயன்படுத்தப்பட்டதால் வாகனங்கள் மோதிக் கொள்ளும் அபாயமும் மக்களை மோதிக் கொல்லும் ஆபத்தும் அடிக்கடி எதிர்நோக்கப்பட வேண்டியதாக இருந்தது.

கடந்த சில தினங்களாக யாழ்.மாநகர சபையினுல் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளால் இந்நிலை கணிசமான அளவு சீராக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

மாநகரசபை ஊழியர்களும், மாணவத் தொண்டர்களும் சேர்ந்து வீதி ஒழுங்கை நெறிப்படுத்துவதில் இப்போது பெரும்பணி புரிந்து வருகிறார்கள்.

இதனுல் பல வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் இடைஞ்சல்களும், விபத்துக்களும் குறைக்கப்பட்டுள்ளன. இதற்காக அவர்களுக்கு ஒரு சபாஷ்.

இதேவேளை, தனியார் மினிபஸ்களில் பயணிகளை மூட்டை முடிச்சுக்களில் அடைவது போல் ஏற்றிச் செல்லும் நடவடிக்கைகளையும் இதனோடு சம்பந்தப்பட்டவர்கள் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கிளிநொச்சி, வவுனியா போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் மினிபஸ்களில் குறிப்பிட்ட அளவு பயணிகளே ஏற்றப்பட வேண்டும் என கட்டுப்பாடு விதிப்பதன் மூலம், இதனுல் மக்கள் எதிர்கொள்ளும் பல இடைஞ்சல்களையும் தவிர்க்கலாம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

---

### இலங்கையரைப் பற்றி கனடா பத்திரிகை அலசுகிறது

# திருமணத்தை நிச்சயிக்கும் வீடியோ சந்திப்புக்கள்

ஒரு 22 வயது ஆசிரியை ரஞ்சினியின் மணவிழாக் காண பெற்றோர் விரும்பினர்.

ஆகவே, விவாகமாகாத மகனுடன் கனடாவில் வசிக்கும் தம் உறவினருக்கு மகளின் வீடியோவை அனுப்பிவைத்தனர் அந்த இளம பெண் உறவினர்களால் ஏற்கப்பட்டு இரண்டு மாதங்களில் இருவருக்கும் தென் இந்தியாவில் இந்து முறைப்படி விவாகம் நடந்தேறியது.

நாட்டின் தலைநகரான கொழும்புக்கு வடக்கே 300 கிலோ மீற்றர் தொலைவில் இலங்கையின் சிறுபான்மைத் தமிழர்களின் தாயக யாழ்ப்பாணத்தில் வீடியோ திருமண அறிமுகங்கள் பிரபல்யமடைந்து வருகின்றன. அங்கு அதிகமான இளைஞர் வெளிநாடு செல்கிறார்கள். அல்லது தமிழ் கரந்தடிப்படையில் சேர்கிறார்கள் இதனுல் எதிர்கால வரன்களைத் தேடுவது அங்கு எளிதல்ல.

குடாநாட்டின் 800, 000 வாசிகளில் 200, 000 பேர், கடந்த 10 ஆண்டுகளில் அகதிகளாகவோ அன்றி தொழில் பெற்றோ வெளியேறியுள்ளார்கள் என்று உத்தியோகப் பற்றற்ற மதிப்பீடுகள் குறிக்கின்றன.

தொழிலுக்கு மத்திய கிழக்கையும், அரசியல் புகலிடத்திற்கு கனடா, மேற்கு ஜேர்மனி, பிரிட்டிஷ் நாடுகளையும் அவர்கள் விரும்புகிறார்கள்.

அதிகமானோர் இளைஞர்களாயிருப்பதால், தங்களுக்குத் தோதான உகந்த வரன்களைத் தேடுவது யுவதிகளுக்குச் சிரமமாகின்றது என்று ஒரு உள்ளூர் பத்திரிகை எழுத்தாளர் கூறினார். கலியாணத் தரகர்களுக்கு மிகவும் பிரபலமான "வீடியோ திருமணம்" அபிவிருத்தி அடைந்து வரும் தொழில் என்றும் அவர் கூறினார்.

இருபகுதியினரும் செல்வந்தர்களாயின், தோதான ஒரு விவாகத்தில் தரகர்களுக்கும் 'நல்லஅடி' கிடைக்கிறது. சாதி பாரம்பரியம் பேணுகின்ற யாழ்ப்பாண சமூகத்தில் சமுதாயத்தில், தங்களுளுடைய துணைகளை தாங்களே தேடுவது மிக மிகக் குறைவே. "எங்களிடத்தில் உள்ள பாரம்பரியங்களில் ஒன்று பெற்றோரே தங்கள் பிள்ளைகளுக்குத் துணை தேடுவது என்பது" என்று இளைப்பாறிய ஒரு உத்தியோகத்தர் கருத்துத் தெரிவித்தார். காதல் விவாகங்கள் தவிர்க்கப்படுகின்றன.

நகைகள், நஞ்சை புஞ்சைகளைவிட 25,000 டொலர் வரை ஒரு வைத்தியகலாநிதியோ பொறியியலாளரோ சட்டத்தரணியோ பெற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு பலமான சீதன ஒழுங்கு அங்குண்டு.

குறிப்பிட்ட அளவு சீதனத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழப்பதனுல் "காதல்" விவகாரங்களை மூத்தவர்கள் கண்டிக்கின்றார்கள். இருந்தும் இப்பொழுது இதில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

இந்நாட்டவர்கள் பெருமளவில் மேற்கத்தைய நாடுகளில் இருப்பதால், யாழ்ப்பாண நாட்டுக் கலாசாரம் மேற்கு நாடுகளின் கலாசாரத்தினுல் அழிக்கப்படுகிறது, பாதிக்கப்படுகிறது

"நாங்கள் இந்த அந்நிய கலாசாரத்திற்குப் பழக்கப்படுகிறோம்" என்று ஒரு பத்திரிகையாளர் கருத்துத் தெரிவித்தார். முன்னர் விவசாயத்தில் தங்கியிருந்தவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதோடு பல தீயபழக்கங்களையும் மேல்நாடுகளில் உழைப்போர் பணம் உண்டாக்குகிறது என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பொருட்களினுல் கடைகள் நிரம்புகின்றன. அவற்றை வாங்கப் பணப் புழக்கமும் உண்டு.

பகற்காட்சி நேரங்களில் பின்வரிசையில் உள்ள இளசுகள் கைகோர்த்துக் கொள்ளுதல், முத்தமிடல் உல்லாச சல்லாபங்களுடன் படமாளிகைகள் நிரம்பிக்காணப்படுகின்றன

வெளிநாடுகளில் வேலைவாசஞ் செய்பவர்களின் மனைவிமாரில் விரக வேதனையாற் பாதிப்புற்றவர்கள் தங்கள் 'காதலர்' களுடன் இவ்விடங்களிற்காணப்படுகிறார்கள்.

இ.விஜயேந்திரன்
கனடா.

ஆசிரியர்
முரசொலி.

கனடாவில் வெளிவரும் பிரபல பத்திரிகையான 'ottawa citizen' இல் கடந்த மாதம் 2ம்திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சில சம்பவங்கள் பற்றி வந்த சிறு துண்டுப் பிரசுரத்தை நான் இத்துடன் அனுப்புகிறேன் இதில் முக்கியமாகக் கடைசிப் பந்தியில் எழுதப்பட்டுள்ள சம்பவம் மனைவிமாரை யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு கனடாவில் வதியும் கணவன்மாரைப் பற்றியது அவர்களை இவ்விடயம் அதிகளவில் பாதித்துள்ளது மேலும் இதைப்போன்ற நிகழ்சிகள் நடக்காமலிருக்கும் பொருட்டும், சீதனக் கொடுமைகளை நீக்கும் பொருட்டும், நான் அனுப்பும் துண்டுப் பிரசுரத்தையும் இதன் தமிழாக்கத்தையும் கட்டாயம் உங்கள் பத்திரிகையில் வெளியிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இ விஜயேந்திரன்

---

B8 THE OTTAWA CITIZEN • FRIDAY, MARCH 2, 1990

**Living**

# Meetings via video result in marriages to Tamils abroad

JAFFNA, Sri Lanka (Reuter) The parents of Ranjini, a 22 year old teacher, wanted to see her married. So they sent a video of their daughter to relatives in Canada who had an unmarried son.

The young woman was accepted and two months later the two were married in southern India in traditional Hindu rites.

Video marriage introductions are becoming popular in Jaffna, the heartland of Sri Lanka's Tamil minority community, which is about 300 kilometres north of Colombo, the country's capital.

Prospective bridegrooms are a rare commodity in Jaffna most young men go abroad or join Tamil guerrilla groups

Unofficial estimates indicate 200,000 of the Jaffna Peninsula's 800,000 residents have found jobs or refuge abroad in the past 10 years.

The Middle East is the preferred place for jobs Canada, West Germany and Britain for political asylum.

"With most of them being young men, young women are finding it hard to get suitable partners," said a local journalist.

He said the video marriage, as it is popularly known, is becoming a flourishing business for marriage brokers.

"Since both sides are wealthy, the broker calls the shots if he makes a good match," the journalist said.

In Jaffna's traditionally caste-entrenched and conservative society, young people rarely find their own mates.

"We have traditional values that surround our culture," a retired government official explained. "One is that the parents select partners for their children."

A strong dowry system — by which the family of a professional, such as a doctor, engineer or lawyer, can receive as much as $25,000 in addition to property and jewelry — traditionally ruled out marrying for love.

Elders used to frown on "love affairs," because they meant the bride-to-be's parents could not be held to a promise to provide a dowry But changes are creeping in.

Western values and behavioral patterns are making inroads into Jaffna culture since a large part of the population now lives abroad.

"It is this alien culture that we are getting used to," said the journalist.

He said money from Tamils working abroad was not only boosting the economy, previously dependent on agriculture, but also bringing in new vices.

Shops are filled with foreign goods and people have money to spend. Movie theatres are full of young couples holding hands, kissing and whispering in the back row during matinee shows.

Residents also say that bored young wives, whose husbands work abroad, are seen in the company of their lovers at these shows

---

### முறைசாராக் கல்விப் பிரிவுக்கு

# நிதி உதவி வழங்க பல நிறுவனங்கள் ஆர்வம்

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவுக்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவுவதற்காக முன்வந்துள்ளதாக முறைசாராக் கல்விப் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர் எஸ். வி எஸ். சிதம்பரநாதன் தெரிவித்தார்.

இம்முறை முறைசாராக் கல்விப் பிரிவில் பயிற்சிபெற 10000 பேர் விண்ணப்பித்துள்ளார்கள். இவர்களில் 3,000 பேருக்கு மட்டுமே பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மிகுதி 7.000 பேருக்கு உதவும் நோக்குடனே அரசு சார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. கிடைக்கப்பெறும் நிதியைக் கொண்டு மேலதிகமாக எவ்வளவு மாணவர்களைப் பயிற்சி நெறிக்கு சேர்த்துக்கொள்வதென்பது குறித்து தீர்மானிக்கப்படும். (03)

# செய்தி மஞ்சரி

## ஊக்குவிப்புத் திட்டங்கள்

சிறந்த கைப்பணித் தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக எனது அமைச்சு இப்போது பலதிட்டங்களை உருவாக்கிச்செயற் படுத்திவருகின்றது. கைப்பணியில் ஈடுபடுபவர்கள் இருக்கும் இடங்களுக்கு எனதுஅமைச்சுஉத்தியோகத்தர்கள் சென்றுஅவர் களின் குறைநிறைகளைக் கவனிக்கவுள்ளனர். என்று உல்லாசப் பயணத்துறை கிராமிய தொழில் அமைச்சர் திரு. எஸ் தொண் டமான் நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிஒன்றில் பேசு கையில் கூறினர்.

## கிராமசேவகர் முறையீடு

ஐம்பது வீத சம்பள ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கக் கோரி முல்லைத்தீவு மாவட்டக் கிராம சேவகர்கள் யாவரும் ஒரு நாள் லீவில் சென்று அரசாங்க அதிபர் திரு. கே. பொன் னம்பலத்தைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர். கச்சேரி நிர்வாகத்தின்கீழ் கடமையாற்றும் கிராம சேவகர்களைத் தவிர்ந்த சகல அரசாங்க ஊழியர்களும் இந்த ஊக்குவிப்புப் பணத்தைப் பெற்றுள்ளபோதிலும் கிராமசேவை உத்தியோ கத்தர்களுக்கு வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவதாக கிராம சேவகர்கள் எடுத்துக் கூறினர். விரைவில் நிவாரணம் கிடைக்காவிடில் பகிஷ்கரிப்பில் ஈடுபட எண்ணியுள்ளோமென் றும் அவர்கள் கூறினர்.

## கண் சிகிச்சை நிலையம்

அம்பாறையில் நடத்தியது போன்று மட்டக்களப்பிலும் நடமாடும் கண்சிகிச்சை நிலையம் ஒன்றை நடத்துமாறு மட் டக்களப்பு மருத்துவமனைக்குழு இலங்கைக் கண்தான சங்கத் திற்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. மட்டக்களப் பில் ஒரு பொது வைத்தியசாலை உள்ள போதிலும் இங்கு கண் வைத்திய நிபுணரோ அல்லது பயிற்சி பெற்ற வைத்தி யரோ இல்லை. மேலும் இங்குள்ள கண் நோயாளர்களிடம் கண்டி போன்ற இடங்களுக்கு வைத்திய சிகிச்சைக்குச் செல் வதற்கான பொருளாதார வசதியும் இல்லை என்று தெரிவிக் கப்படுகின்றது.

## வெற்றிடம் நிரப்ப ஏற்பாடு

சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையா ளர் தரம் 2, சிரேஷ்ட போதனாசிரியர், நூலகர், மரவேலை, மின்னியல், கணித, வணிக போதனாசிரியர்கள் மற்றும் பதவிகள் சம்பந்தப்பட்ட 17 வெற்றிடங்கள் கடந்த 1987-ம் வருடம் முதல் நிரப்பப்படாமல் உள்ளன.

இதனால் சில பயிற்சிகளை நடாத்த முடியாத நிலை ஏற் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இவ்வெற்றிடங்களுக் குப் புதிய நியமனங்களை மேற்கொள்ள உயர்கல்வியமைச்சு தாமதம் செய்ததால் மாணவர்கள் பலர் பயிற்சியை விட் டகலத் தொடங்கியுள்ளனர். கல்லூரி அதிபர் ஜனாப் எம். எச். ஏ. ஸமத் உயர் கல்வியமைச்சர் திகாமடுல்ல எம். பி. முதலானோருக்கு புகார் கொடுத்ததையடுத்து விரை வில் நடவடிக்கை மேற்கொள்வதாக உயர் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## 'நோக்கம் குறுகியதல்ல'

''நாம் தேர்தல்களில்நின்று பதவிகள்பெறுவதற்காக கிராமங் கள்தோறும் மக்கள் முன்னணிகளை அமைக்கவில்லை. மக்கள் சக்தியைத் திரட்டி எமது பலத்தைப் பெருக்கி எமது இறுதி இலட்சியமான தமிழீழத்தைப் பெறுவதே மக்கள் முன்னணி அமைப்பதன் நோக்கமாகும்'' என்று தமிழீழ விடுதலைப் புலிக ளின் மக்கள் முன்னணி வலிகாமம் பிராந்திய அரசியல் பொறுப் பாளர் திரு. இ ஆஞ்சநேயர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தி யாலயத்தில் மேற்படி பிரதேச மக்கள் முன்னணி உறுப்பினர் முன்னிலையில் பேசுகையில் கூறினர்.

## புலிகள் கலை நிகழ்ச்சிகள்!

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசா ரப் பிரிவால் துணுக்காய் பாண்டியன்குளம், பிரதேசத்தில் கலை, கலாசார நாடகப் போட்டிகள் நடைபெற்றன. மல் லாவி, யோகபுர பாடசாலைகளில் இரண்டு தினங்கள் கொத் தணி அதிபர் திரு. சிவராஜா தலைமையில் நடைபெற்ற கலாசாரப் போட்டிகளில் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன், வன்னி மாவட்டக் கலை, கலாசாரப் பொறுப்பாளர் போஜன் மற்றும் முல்லைத்தீவு, கல்வித் திணைக் கள நிர்வாக உத்தியோகத்தர் மெட்ராஸ் மெயில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரூபா 5 ஆயிரம் கடனுதவி

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி அர சாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் அரசு சார்பற்ற நிறுவனங்க ளூடாக ஐயாயிரம் ரூபாவரையிலான குறுகிய கால கடனுதவி களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. இத்தகவலை அம்பாறை மாவட்ட உற்பத்தித் திட்ட மிடல் இணைப்பதிகாரி திரு. மாமாங்கராஜா தெரிவித்தார்.

அரசு சார்பற்ற நிறுவனங்கள் இக்கடன் கோரி விண்ணப் பிக்கும் பட்சத்தில் அரச அதிபர்கள் ஊடாக இக்கடன்கள் வழங்கப்படும். வழங்கப்படுகின்ற கடன்களுக்கு அந்தந்த நிறுவ னங்களே பொறுப்பாக இருக்கும் ஐ. நா. அபிவிருத்தி நிதியம் மற்றும் ஐ. நா. நிறுவனம் மூலம் இக்கடனுதவி வட,கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக இணைப்பதிகாரி தெரிவித்தார்.

# சிறு தொழில்களை ஆரம்பிக்க புதிய கடன் திட்டம் அறிமுகம்

சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக அரசு சார் பற்ற நிறுவனங்களினூடாக கடன் வழங்கும் திட்ட மொன்று யாழ் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள் ளது.

யாழ் மாவட்டத்தில் நன்கு தாபிக்கப்பட்டதும் பரந்த அளவில் ...டி மட்டத்தில் இருந்து செயற்படக் கூடிய ஒழுங்கமைப்பு ஆற்றல் உள்ள அரசு சார்பற்ற நிறுவனங் கள் ஊடாகவே இக்கடன் கள் வழங்கப்படவுள்ளன.

மாதம் 1000 ரூபாவிற்குக் குறைவான வருமானமுள்ள வர்களுக்கும் 18வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர் களுக்குமே இக்கடன் வழங் கப்படும் அரசு சார்பற்ற நிறு வனங்கள் இத்திட்டத்திற் குத் தம்மை பதிவு செய்ய வேண்டும், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு வட்டியற்ற கடன் வழங்கப்படும். இந்நிறு வனங்கள் தாம் வழங்கும் கட னுக்கு 4 சதவீத வட்டி அற விடலாம்.

நிறுவனங்களினுல் பெறப் படும் கடன்கள் மீளச் செலுத் தப்பட வேண்டும். இது தொடர்பான விசேட கூட் டம் ஒன்று நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ் மாவட்டத் தில் இயங்கிவரும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (03)

## கடத்தற்காரர் சேபாலாவின் இதயம் கவர்ந்த கன்னி

இலங்கையின் முதலாவது விமானக் கடத்தல்காரர் சேபால எக்கநாயக்காவை ஞாபகமிருக்கிறதா? மக ணின் பாசத்தினுல் விமானத்தைக் கடத்திய சேபால தற்பொழுது ஒரு மங்கையின் பாசவலையில் சிக்கியுள் ளார். நுவரேலியாவைச் சேர்ந்த யசாங்கனி என்ற 22 வயது ஆங்கில ஆசிரியையினை மூன்று மாதங்களுக்கு முன் னர் பதிவுத் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்ற விடயம் தற்போது தான் அம்பலத்திற்கு வந்துள்ளது. இவர்கள் இருவரும் குடும்ப நண்பர்களாம் திருமணத் திற்கு பின்னர் தனது துணைவியாரோடு நுவரேலியா வில் அமைதியாக வாழ்ந்து வருகிறுர் சேபாலா. முன் னர் இத்தாலியப் பெண்மணி ஒருவரை மணமுடித்து பின்னர் விவாகரத்து செய்திருந்தார் இத்தாலிய மனை வியிடமிருந்து தனது மகனை தன்னிடம் பெற்றுத்தரு மாறு கோரியே இவர் 1982இல் 'அல் இற்றால்யா' நிறுவன விமானத்தைக் கடத்தியிருந்தார்.

## புதிய நியமனம்

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரான பொ. சங்கரப்பிள்ளை உடுத் துறை கொத்தணியின் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டுள் ளார். இதற்கான நியமனக் கடிதம் வடமராட்சி கோட் டக்கல்வி அலுவலகத்தினுல் அண்மையில் வழங்கப்பட் டது. மேலும் உடுத்துறை கொத்தணி அதிபர் பதவி தற்பொழுதும் காலியாகவே இருந்து வருகின்றது. முன்னர் கொத்தணி அதிபராகக் கட மையாற்றிய கே வி. இராச லிங்கம் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென் றதையடுத்தே இப்பதவி காலி யாகவுள்ளது.

இக்கொத்தணி அதிபர் பத வியை நிரப்ப வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துவருகின் றது. (43)

## இன்றைய நிகழ்ச்சிகள்

### சுழிபுரத்தில்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சன சமூகநிலையங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு சுழிபுரம் பிரதேசசபை அலுவலகத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் து. வைத்திலிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பிராந்திய சன சமூக நிலைய உத்தியோகத்தர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு இப்பிர தேசத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களினதும் தலைவர், செயலாளர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். சுழிபுரம் பிர தேசசபைப் பொறுப்பதிகாரி எஸ். ரி. கதிரவேற்பிள்ளை இக் கருத்தரங்கிற்கான சகல நட வடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளார். (12)

### அத்திபடியில்

அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகோற் சவம் இன்று கொடியேற்றத் றத்துடன் ஆரம்பமாகிறது. 14-ம் திகதி புதுவருடத்தினத் தன்று தேர்த் திருவிழாவும், 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும், 16-ம் திகதி வசந்தோற்சவமும் இடம் பெறும்.

## 4000 ரூபா நிவாரணம் இவர்களுக்குக் கிடைக்கும்

உற்பத்தித்திறன் முயற்சிக் கான நிவாரணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் பின்வரும் இடங்களுக்கு நாளை 7-ம் திகதி வழங்கப்படும்.

உசன், மீசாலை தெற்கு, சர சாலை, இடைக்குறிச்சி, தாவளை இயற்றுலை, நுணுவில் மேற்கு, சாவகச்சேரி வடக்கு, சாவகச் சேரிநகரம், நாவற்குழி, மற வன்புலோ. கோயிலாக்கண்டி, கச்சாய், மட்டுவில் தெற்கு, அல்லாரை. வரணி வடக்கு, கரம்பை குறிச்சி, மட்டுவில் வடக்கு, கைதடி கிழக்கு, கைதடி மத்தி ஆகிய இடங்க ளுக்கும்

எதிர்வரும் 8-ம் திகதி பின் வரும் இடங்களுக்கு இந்நிவா ரணம் வழங்கப்படும். நாவற் காடு, விடத்தற்பளை, வரணி இயற்றுலை. தவசிக்குளம், கொடிகாமம், கச்சாய், மட்டு வில் வடக்கு, சாவகச்சேரி வடக்கு, மறவன்புலோ, நாவற் குழி, சாவகச்சேரி நகரம், கைதடி, நுணுவில், தனங்கி ளப்பு, நுணுவில் மேற்கு, மட் டுவில் தெறகு ஆகிய இடங்க ளுக்கும் வழங்கப்படும். (03)

### ஜனுதிபதி அறிவிப்பு

## ஐந்து ஆண்டுகளுக்குள் 10 லட்சம் பேருக்கு வேலை

1995-ம் ஆண்டுக்குள் பத்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என ஜனுதிபதி ஆர். பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

தற்போது மேற்கொள்ளப் பட்டு வரும் உற்பத்தி அபிவி ருத்தித் திட்டங்கள் மூலம் இதை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் அவர் தெரி வித்தார். எந்தவித அரசியல் செல்வாக்குகளுக்கும் இட மளிக்காது தகுதி அடிப்படை யிலும், இனவிகிதாசார அடிப்படையிலும் இவ்வேலை வாய்ப்பு வழங்கப்படுமென வும் அவர் கூறினர்.

### யாழ் புகையிரத நிலைய

## கொள்ளை முயற்சியை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

யாழ் ரயில் நிலையத்தில் கொழும்பிலிருந்து ரயில்கள் வரும் நேரங்களில் இடம்பெ றும் பிற்பொக்கட், மற்றும் கொள்ளைகளை தடுப்பதற்காக ரயில் நிலையத்தின் சகல கதவு களும் திறந்து விடப்பட்டுள் ளன.

சனநெருக்கடியைப் பயன் படுத்தி பலர் இக்கொள்ளை முயற்சியில் ஈடுபட்டு வருவத ஞலே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக யாழ் புகை யிரத நிலைய அதிபர் தெரிவித் தார். அத்துடன் இக்கொள்ளை முயற்சிகளைத் தடுக்க புகையி ரத நிலைய ஊழியர்கள் பலர் சேவையிலீடுபட்டுள்ளார்கள். (03)

## குப்பி விளக்குடன் ஒரு குட்டி ரயில் நிலையம்

கோண்டாவில் ரயில் நிலை யம் மின்சாரமின்றி முற்ருக இருளில் மூழ்கிய நிலையிலுள் ளது. தற்பொழுது மெயில் ரயிலும் சேவையிலீடுபடுத்தப் பட்டுள்ளதால் இரவு பயணி கள் வெளிச்சமின்றிப் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதுடன், அவ் வப்போது பல திருட்டுச் சம்ப வங்களும் இடம்பெற்று வரு வது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குடிநீர் வசதி செய்யப்படாமல் உள்ளதுடன், மலசல கூடமும் முற்ருகப் பழுதடைந்து பாவிக்க முடி யாத நிலையிலுள்ளது. நீண்ட காலமாக இந்நிலையத்தில் இருந்துவரும் இந்தக் குறை பாடுகள் குறித்து மேலிடத் திற்குப் பலமுறை முறைப் பாடு செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படாமல் உள்ள தென்று புகார் தெரிவிக்கப் படுகின்றது. (41)

# நாசகார நடவடிக்கைகளால் 1035 கோடி மொத்த இழப்பு

நாசகார சக்திகளின் சீர்குலைப்பு நடவடிக்கைகளால் நாட்டுக்கு இதுவரை ஆயிரத்து முப்பத்தைந்து கோடி ரூபா மொத்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பிரச்சினைகள் மத்தியிலும் அரசாங்கம் ஆக்கபூர்வமான அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார். ஜனாதிபதி பாராளுமன்ற இரண்டாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

உல்லாசப் பிரயாணிகள் தற்போது அதிகரித்துள்ளதாகவும், தேயிலை உற்பத்தி அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்று வருவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

## பெண்களின் சமத்துவம் இங்கு இப்படி செயற்படுகிறது

கொழும்பில் ரயிலிலோ, பஸ்ஸிலோ பயணம் செய்வதற்கு சிலர் ரிக்கற்றே எடுப்பதில்லை. இத்தகையவர்கள் சேர்ந்து ஒரு சங்கம் உருவாக்கியிருக்கின்றனர். இச்சங்கத்தில் உள்ளவர்கள் மாதாந்தம் பத்துரூபாவை சங்க நிதிக்கு வழங்க வேண்டும். ரிக்கற் இல்லாமல் பயணம் செய்யும்போது இச் சங்க உறுப்பினர் யாராவது அகப்பட நேர்ந்தால் சங்கம் நஷ்டஈட்டை கட்டி அவரை காப்பாற்றிக் கொண்டு வந்து விடும். இதில் புதிய விஷயம் என்னவெனில் இந்த ரிக்கற் எடுக்காதோர் சங்கத்தில் இப்போது கொழும்பு பெண்மணிகளே அதிகமாக அங்கம் வகிக்கின்றனராம். இது சங்க பெண் உறுப்பினர் ஒருவரே வெளிவிட்ட செய்தி.

## மக்கள் வங்கியின்
# அடகு நகைகள் மீளளிப்பு தொடர்பான அறிவித்தல்

யாழ் ஸ்ரான்லி வீதி, யாழ். பிரதான வீதி, புங்குடு தீவு, கன்னாதிட்டி, சங்கானை யாழ், நவீன சந்தை, சாவகச்சேரி பிரிவு ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்து கடந்த வருடம் செப்டெம்பர் மாதமளவில் மீளப்பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள் பற்றி மக்கள் வங்கி நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் இவை மிகவிரைவில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்நகைகள் இம்மாதம் 2ம் திகதி கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட இருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்னமும் அவை வந்து சேரவில்லை என்றும் இன்று அளவில் வந்து விடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

பத்திரிகைகள் மூலம் விளம்பரமாக நகைகள் வழங்கும் திகதிகள் பற்றி அறிவிக்கபடும் என்றும் இத்தினங்களில் யாழ் பொலிஸ் நிலையத்திலிருந்து நகைகள் உரியவர்களுக்கு மீளளிக்கப்படும் என்றும் உரிய தினத்தில் பெருத சகல யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களுக்கும் இம் மாதம் 20ம் திகதி யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து மீளளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது,

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி, பரந்தன் கிளைகளில் அடகு வைத்து மீளப் பெறுவதற்கு பணம் செலுத்தியவர்களது நகைகள் தற்பொழுது கிளிநொச்சி தபால் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி பணக் கருமபீடத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன என்றும் இந்நகைகளை பெறத்தவறியவர்களுக்கு கிளைகள் மூலம் தனித் தனியே கடிதங்கள் அனுப்பப்படும்என்றும் பரந்தன் கிளையில் நகைகளை மீளப் பெருதவர்கள் 20ம் திகதி வெள்ளிகிழமை நகைகளை மீளப்பெற்றுக்கொள்ளலாம் என்றும் கிளிநொச்சிக் கிளையில் நகைகளை பெருதவர்கள் இம்மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் மேலதிக விபரங்களுக்கு வங்கி முகாமையாளரிடம் தொடர்பு கொள்ளவும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

### முல்லைத்தீவு மாவட்டம்

முதலாம் கட்டமாக முல்லைத் தீவுக்கிளையில் 6.12.83 வரை அடைவு வைத்து21 9 89வரை பணம் செலுத்தியவர்களது நகைகளை மாங்குளம் மக்கள் வங்கிகிளையிலிருந்து இம்மாதம் 6ந் திகதி வரை நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இரண்டாம் கட்டமாக முல்லைத்தீவு கிளையில் அடைவுவைத்துமீளப் பெறுவதற்கு பணம் செலுத்தியவர்களது நகைகளும் மாங்குளம் கிளை நகைகளும் இம்மாதம் 2ம், 3ம் கிழமைகளில் வழங்கப்படும், இது பற்றிய விபரங்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் தனித் தனி கடிதங்கள் மூலமும் அறிவிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

### வவுனியா மாவட்டம்

வவுனியாக் கிளையில் அடைவு வைத்து மீளப்பெறுவதற்காகப் 21.9.89 வரைபணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 2ஆம், 3ஆம் கிழமைகளில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படும் மேலதிக விபரங்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்,

### மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டக் கிளைகளில் அடைவு வைத்து மீளப் பெறுவதற்காக 21 9,89 முன்னர் மீளப்பெறுவதற்கு பணம் செலுத்தியவர்களின் நகைகள் மன்னார்கிளையில் வைத்துவழங்கப்படும் முருங்கன் கிளையில் நகைகளை மீளப்பெறுவதற்கு பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 3 ஆம் கிழமை வழங்கப்படும்: மன்னார் நகைகள் மேமாதம் முதற் பகுதியில் வழங்கப்படும். இது பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கீரிமலை நகுலேஸ்வரம் மகோற்சவம்

கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வர அம்பாள் மகோற்சவம் சென்ற புதன்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 7ம் திகதி மாலை சனிப்பிரதோஷ உற்சவமும், 13ம் திகதி சம்பறமும் இடம்பெறும். 14ம்திகதி புதுவருட சங்கிராந்தி உற்சவமும், தேர் உற்சவமும் 15ம்திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

## சப்-இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் சார்ஜன்டுகள் சப் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்த்தப் பட்டுள்ளனர். சார்ஜன்ட் ஜெகநாதன், சார்ஜன்ட் மாசிலாமணி ஆகியோரே பதவிஉயர்வு பெற்றவர்களாவர். இவர்களுக்கு களுத்துறையில் உள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் மேலதிக பயிற்சி வழங்கப்படவுள்ளது.

## போதை வஸ்துடன் பெண் கைது

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் நேற்று போதைவஸ்து கடத்திய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 3 கிலோ கிறாம்நிறையுடையஇப்போதை வஸ்தை 45 வயது மதிக்கத்தக்க பெண்ணே கடத்தினர்.

இவரது சூட்கேசில் இருந்தே இப்போதை வஸ்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர் ஒரு குழந்தையுடன் பயணத்தை மேற்கொள்ள வந்திருந்தார் தனது சூட்கேசுக்குள் எப்படி இப்போதைவஸ்து வந்தது என்று தெரியாதென அவர் தெரிவித்துள்ளார்.

## ஜீப்பிலிருந்து துப்பாக்கிகள் மீட்பு

தென்பகுதி மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் பஜாரோ ஜீப்பில் இருந்து ஒரு இயந்திரத் துப்பாக்கியையும் ஒரு ரிப்பீட்டர் துப்பாக்கியையும் மொறட்டுவப் பொலிஸார் கைப்பற்றியுள்ளார்கள்

இது தொடர்பாக ஜீப்பில் பயணம்செய்த மெய்ப்பாதுகாவலரும் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் இதற்கும் தனக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று மாகாணசபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் பரீட்சை நிலையங்கள் அதிகரிப்பு

வடமராட்சி கிழக்கில் க.பொ.த, சாதாரண தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையங்கள் அடுத்தமுறை அதிகரிக்கப்படலாமென தெரிய வருகின்றது.

தற்சமயம் உடுத்துறை மகா வித்தியாலதிதில் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கும் செம்பியன்பற்று அ.த.க, பாடசாலையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன,

இவ் வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற இருக்கும் பரீட்சைக்கு இப்பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் இருந்து முதற் தடவையாக பல மாணவர்கள் தோற்ற உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நீண்டகால இடை வெளிக்குப்பின் சென்ற வருடமே வடமராட்சிகிழக்குப் பகுதியில் பரீட்சைநிலையங்கள் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது(43)

# விளையாட்டுச் செய்திகள்

## கலைமகள் விளையாட்டுப் போட்டி

(விளையாட்டுத்துறை நிருபர்)

தொண்டைமானாறு வல்லை வீதி கலைமகள் சன சமூக நிலயத்தின் 12-வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் 12. 5 90 முதல் 15. 5 90 வரை நடைபெறவுள்ளன. 12, 13, 14ந் திகதிகளில் மின்ஒளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் 14ந் திகதி ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டமும் பெண்களுக்கான 15 மைல் சையிக்கிள் ஓட்டமும், ஆண்களுக்கு 10 மைல் மரதன் ஓட்டமும் நடைபெறும். 15-ந் திகதி நிலைய விளையாட்டுக்களும் இடம் பெறும். பங்குபற்றும் கழகங்களும் வீர, வீராங்கனைகளும் 15. 4. 90க்கு முன்னர் நிலைய செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கரப்பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம் அரசடி ஜனசக்தி சன சமூக நிலயத்தின் 42-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஆறுபேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று நடைபெறவுள்ளது இப்போட்டி யாழ் மாவட்ட ரீதியிலே நடைபெறும். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டு கழகங்கள் எதிர்வரும் 10-ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி இ. அமுதராசா. ஜனசக்தி சன சமூக நிலைய விளையாட்டு செயலாளர், அரசடி வீதி, நல்லூர். யாழ்ப்பாணம் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் நேரிலோ தபாலிலோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஆசிய போட்டி வீரர் தேரிவு

ஸ்ரீலங்கா உதைபந்தாட்டப் சமேளனம் ஆசிய உதைபந்தாட்டச் போட்டிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கு முன்னோடியாகப் பயிற்சி முகாம் ஒன்றை, சுகததாச விளையாட்டரங்கில் ஏப்ரல் 11ம் திகதி தொடக்கம் நடத்தவுள்ளது. இப் பயிற்சி முகாமிற்கு யாழ் உதைபந்தாட்டக் கழகங்கள் தமது கழகங்களில் இருந்து அதிசிறந்த வீரர் ஒருவரைத் தெரிந்து அனுப்பிவைக்கலாம். இது தொடர்பான மேலதிகம்விபரங்கட்கு ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சமேளன உபதலைவர் திரு J. S N. ஆனந்தராஜா அவர்களுடன் அல்லது யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் திரு. E. K' குமரையா அவர்களுடன் தொடர்பு கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுக்கழகம் புனரமைப்பு

நீர்வேலி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலை கொண்டிருந்த அமைதிப் படையினர், அங்கிருந்து வெளியேறியதன் பயனாக, நீர்வேலி விளையாட்டுக் கழக அங்கத்தினர் மைதானத்தையும், அதனை அண்டியுள்ள நூல் நிலையத்தையும் பொறுப்பேற்று புனர் அமைப்புச் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். புனர் அமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்ததும் முதற் கட்டமாக கரப்பந்தாட்ட பயிற்சி வகுப்புக்களை யாழ், கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்த இருப்பதாக சங்க காரியதரிசி கே. எஸ். குணசிங்கம் தெரிவித்தார். மேலும் இக் கழகத்தில் புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளும் பணியும் ஆரம்பமாகியுள்ளது. அங்கத்தவராக சேர விரும்புவோர் தமது விண்ணப்பங்களைக் கழகச் செயலாளரிடமோ அல்லது தலைவரிடமோ கையளிக்குமாறு கோரப்படுகின்றனர்.

(16)

## கச்சேரி கிழக்கு அணி வெற்றி

கச்சேரி கிழக்கு சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்திற்கும், உடுவில் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில், கடந்த 4-ம் திகதி அரியாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற, கரபந்தாட்டப் போட்டியிற் கடும் போட்டியின் பின் கச்சேரி கிழக்கு சனசமூக நிலைய அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டியது. ஸ்கோர் விபரம் 15:13,7-15,15.11

இரண்டாவது செற்றை 7 புள்ளிகளை மாத்திரமே பெற்று கோட்டை விட்டதினால் மூன்ருவது செற் ஆரம்பத்தில் சற்றுப் பதட்டம் அடைந்து உற்சாகம் குன்றிய நிலையிற் காணப்பட்டனர் பின் படிப்படியாக முன்னேறி ஈற்றில் வெற்றியும் பெற்றனர். கச்சேரி அணியின் வீரன் SK பரமலிங்கம் பந்தைப் பலமாக அடித்து ஆடாமல், வெகு நிதானமாகவும், சாதுரியமாகவும், பிழை ஏதும் விடாமல் ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றதும் அல்லாமல் தமது அணி வெற்றி பெறுவதற்கும் பாதை அமைத்துக் கொடுத்தார்: நடுவராக கப்ரின் D.A.M. குணசிங்கம் கடமை புரிந்தார்:

## ஈச்சமோட்டை வெற்றி

அரியாலை சன சமூக நிலையத்தின் 71 வது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, கடந்த முதலாம் திகதி அரியாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில், ஈச்சமோட்டை 'ஜங் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து மோதிய கொழும்புத்துறை 'ஜெற்லைனஸ்' விளையாட்டுக் கழகஅணியை 42 ஓட்டங்களால் தோற்கடித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை அணி தனது முழுவிக்கற்றுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது இதில் எஸ். தர்சன் நான்கு ஆறுகள் உட்பட 28 ஓட்டங்களையும், துரைசிங்கம் ரொனி 14, ஓட்டங்களையும், ஏ ராசேந்திரம் (அணித்தலைவர்)12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஜெற்லையினஸ் தமது துடுப்பாட்டத்தில் சகல விக்கற்றுக்களையும் துரிதகெதியில் இழந்து 51 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர் இதில் நிகால் மாத்திரம் குறிப்பிடத்தக்க அளவில் இரண்டு சிக்சேர் உட்பட 26ஓட்டங்களைப் பெற்ருர்.

(16)

# மட்டக்களப்பில் போதிய பஸ்கள் இல்லை; 20 உள்ளூர்ச் சேவைகள் நிறுத்தம்

கிழக்கிலங்கை இ. போ. சபையின் மட்டக்களப்பு டிப்போவுக்கு போதிய பஸ் இல்லாமையால் 20 உள்ளூர் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு டிப்போவுக்கு சொந்தமான 71 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளன.

52 பஸ்கள் ரயர், எஞ்சின், உதிரிப்பாகங்கள் இன்மையால் டிப்போவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு டிப்போ 63 பாதைகளில் 16615 கிலோ மீற்றர் ஒரு நாளைக்கு ஓட வேண்டும். ஆனால் போதியபஸ் இல்லாமையால் 19 பாதைகளில்4900 கிலோ மீற்றர் மட்டுமே ஒரு நாளைக்கு ஓடுகிறது.

உள்ளூர் பஸ்சேவைகள் பல இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்துக் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

மட்டக்களப்பு டிப்போவுக்கு ஒருமாதத்திற்கு 15 லட்சம் ரூபா வருமானம் வருவதாகவும், அதில் 8 லட்சம் ரூபா ஊழியர்களின் சம்பளத்திற்கு கொடுக்கப்படுவதாகவும், மிகுதி 7 லட்சம் ரூபா எரி பொருளுக்கு செலவாவதாகவும் கிழக்குப் பிராந்திய இ போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 90 லட்சம் ரூ'ா மட்டக்களப்பு டிப்போவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இந்நிதியிலிருந்து 14 பஸ்களை மட்டுமே திருத்தி அமைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு தினசரி இரண்டு சேவைகளும், மன்னார், கொழும்பு, ஹற்றன், பொலன்னறுவை ஆகிய இடங்களுக்கு தினசரி ஒரு சேவையும் நடாத்தப்படுவதாகவும் பெரும்பாலும் பஸ் பற்றாக் குறையால் உள்ளூர் சேவைகளே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

## யார் சொல்லைக் கேட்பது?

# மட்டு. அரச ஊழியர்க்கு இப்படியோரு சங்கடம்

மோட்டார் வாகனங்களுக்கான "லைசன்ஸ்" வழங்குவதில் மட்டக்களப்பு செயலக இறைவரிப் பிரிவு உத்தியோகத்தர்கள் மத்திய அரசாங்கத்தின் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தரவை நிறைவேற்றுவதா? வடக்கு-கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தரவை நிறைவேற்றுவதா என்று தெரியாத நிலையில் திண்டாட வேண்டியுள்ளனர்.

இவ்வாண்டு வாகன லைசன்ஸ் வழங்கும்போது கடந்த வருடங்களில் லைசன்ஸ் பெறப்பட்டதா என கவனிக்கத் தேவையில்லை என மாகாண மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆனால் மத்திய அரசாங்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஊழியர் இறைவரிப் பிரிவுக்கு வழங்கிய உத்தரவில் மட்டக்களப்பு மாவட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களும் இறைவரிப்பிரிவு ஊழியர்களும், மத்திய அரசாங்கத்தின் கீழ் கடமை புரியும் ஊழியர்களே, ஆகவே தமது உத்தரவிற்கமையவே செயற்பட வேண்டும் எனவும் இவ்வாண்டு வாகனலைசன்ஸ் வழங்கும்போது கடந்த ஆண்டுகளில் லைசன்ஸ் பெறவிட்டால் முன்னர் பெறப்படாத ஆண்டுகளுக்கு லைசன்ஸ் பெற்ற பின்பே இவ்வாண்டிற்கு வழங்கவேண்டுமென வும் கடுமையான உத்தரவை வழங்கியுள்ளது.

இந்நிலையில் மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உத்தரவிற்கா மத்திய அரசின் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தரவிற்கா செயற்படுவது என தெரியாத நிலையில் மட்டு. செயலக ஊழியர்கள் உள்ளனர். (05)

# யாழ்.செல்லும் மட்டு.பயணிகள் மாகோவில் தவம்

யாழ்ப்பாணம் செல்லும் மட்டக்களப்புப் பயணிகளுக்காக மாகோ வரை நடத்தப்படும் குறுகிய இணைப்பு ரயில் சேவை யாழ்தேவி ரயிலுடன் சேரும்வகையில் நடத்தப்படுவதில்லை.

இதனால் பயணிகள் யாழ்தேவி ரயிலைத் தவற விட்டு மாகோவில் காத்துக்கிடக்க வேண்டிய அவலநிலை ஏற்படுகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட உறங்கலிருக்கை பயணிகளுக்குக் கிடைப்பதில்லை இந்தப் பதிவுகள் கொழும்பில் பதியப்பட்டு அங்கிருந்து மீண்டும் மட்டக்களப்பு ரயில் நிலையத்திற்கு அனுப்பப் பட்டு வருதில்லை எனத்தெரியவருகிறது.

# புங்குடுதீவு ம.வித்தியாலய மாணவர்கள் சுற்றுலா

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் 10-ம் 11-ம் வகுப்பு மாணவர்கள் விடுமுறை தினத்தை முன்னிட்டு கல்விச்சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ளவிருக்கின்றார்கள். 11-ம் திகதி ஆரம்பிக்கப் படவிருக்கும் இந்தச் சுற்றுலாவின்போது யாழ் மாவட்டத்தின் பிரதான இடங்களான காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை துறைமுகம், சுன்னாகம் மின்நிலயம், போன்ற இடங்களைப் பார்வையிடவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். (20)

## விசேட அலவுன்ஸ் கிடைத்தது

வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சகல அரசாங்க ஊழியர்களுக்கான விஷேட அலவுன்ஸ் ரூபா 200/ சகல உப அஞ்சல் அதிபர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென அகில இலங்கை தமிழ்பேசும் உப தபாலதிபர்கள், தொழிற்சங்கம் அஞ்சல்மா அதிபர், அஞ்சல் திணைக்கள பிரதம கணக்காளர் ஆகியோரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க தை, மாசி, பங்குனி மாதங்களுக்குரிய விஷேட அலவன்ஸ் ரூபா 600/ சகல உப அஞ்சல் அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. (18)

## தீவுப்பகுதியில் சிற்றூரவை

தீவுப்பகுதியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால் சிற்றூரவை என்னும் அரசியற் கிளைகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவு தோறும் இருபது பேர் கொண்ட உறுப்பினர்கள் இச் சிற்றூரவையில் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் அவ்வட்டார அரசியல் வேலைகளைக் கவனிப்பார்கள். இச்சிற்றூரவை அமைப்புக் கூட்டங்கள் தீவக அரசியல் பொறுப்பாளர் வீ. கஸ்ரோ தலைமையில் நடைபெற்று வருகின்றது. (24)

## சுவையான செய்திகள்

### நோய்க்கு இடமேயில்லை

உலகிலேயே அதிக எண்ணிக்கையில் டாக்டர்கள் உள்ளநாடு சோவியத்ரஷ்யாதான். மொத்தம் 8லட்சத்து 31 ஆயிரத்து 300 டாக்டர்கள் உள்ளனர். இதன்படி 307 பேருக்கு ஒரு டாக்டர் ரஷ்யாவில் உள்ளார்.

### முற்பணமே போதும்

மாருதி நிறுவனத்திலிருந்து புதிதாக 'மாருதி 1000' என்ற ஒரு கார் வரப்போகிறது. அதை வாங்குவதற்காக இப்போதே இரண்டு லட்சம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். ஒரு விண்ணப்பத்திற்கு முற்பணமாக இருபத்தையாயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டும். இதனால் மாருதி நிறுவனத்திற்கு மொத்தமாக 500 கோடி ரூபா முற்டணமாகக் கிடைத்துள்ளது.

### நிதானமிழக்கும் கம்பியூட்டர்

கம்பியூட்டர்களுக்கும் எதிரியுண்டு. அந்த எதிரி நைலோன்துணி. பிரிட்டனில் உள்ள லீட்ஸ் பல்கலைக் கழகம் இதனைக்கண்டு பிடித்துள்ளது. நைலோன் ஆடையை அணிந்த பெண்கள் கம்பியூட்டரின் அருகில் வந்தால் அது நிதானமிழந்து போகின்றதாம். நைலோன் துணிகளின் உராய்வின் போது உண்டாகும் மின்னாற்றலே இதற்குக்காரணம் என்கிறார்கள்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# யாழ். பொது நூலகங்கள் 8 மணிவரை திறக்கப்படுமா?

ஆசிரியர்,
முரசொலி,

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலைமை சீரடைந்திருப்பதால் பொது நூலகங்கள் முன்பு நடைமுறையில் இருந்ததைப் போல் இரவு எட்டு மணிவரை திறந்திருப்பதில் எவ்வித சிரமமும் இருக்காது என நினைக்கிறேன். இதனால் மாணவர்கள் மற்றும பொதுமக்கள் பயன் பெறுவார்கள் என்பதை சொல்லத் தேவையில்லை. தற்போது மாலை 5.00 மணியுடன் பொது நூலகங்கள் மூடப்படுகின்றன. ஆனாலும் மாலை 4 45 இற்கே பணியாளர்கள் ஜன்னல் கதவுகளை மூடத் தொடங்குதால் எஞ்சியுள்ள 15 நிமிட நேரமும் வாசிக்க முடிவதில்லை. இக்குறைபாடு தீர நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் நல்லூர் பொது நூலகத்தில் உள்ள பின்வரும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு முயற்சிக்குமாறு நம்பிக்கையுடன் விண்ணப்பிக்கின்றேன்.

1. தினசரி புதினப்பத்திரிகைகள் தற்போது கிடைப்பதில்லை. அதற்கான பகுதி உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
2. எல்லா சஞ்சிகைகளும் கிடைப்பதில்லை. கிடைப்பனவும் ஒழுங்காக இல்லை. மிகவும் பழைய சஞ்சிகைகளும் இருக்கின்றன. பழைய சஞ்சிகைகள் ஒழுங்காக பேணப்பட்டு வாசகர் விரும்பும்போது பார்க்கக் கூடியதாக வைக்கப்பட வேண்டும்.
3. வெளிச்ச வசதி மிகவும் குறைவு, மற்றும் காற்றோட்ட வசதியும் குறைவு.
4. குடி தண்ணீர் கிடைப்பதில்லை.
5. மலசல கூட வசதி இல்லை.

இவற்றின் அவசியத்தைப்பற்றி சொல்லத் தேவையில்லை என நினைக்கின்றேன்.

யாழ்ப்பாணம் இ. செல்வசந்திரன்

# கதகளி கும்மி ஆடும்போது அசையாத அங்கங்கள் உண்டா?

ஆசிரியர்
முரசொலி

யாழ். கூட்டுறவு சங்கத்தின் மகளிர் விழா பற்றி எழுதிய கண்ணோட்டம் படித்தேன். அதில் குறிப்பிட்டது போல் மணப்பெண் உண்மையானவள் அல்ல. பொய்யான உடையலங்காரம் என்பது எல்லோருக்கும் தெரியும். அழகு ராணிப் போட்டி அங்கங்கள்அளவிடப்படுவதன்மூலம்நடப்பது உடையலங்காரம் ஆபாசமாக இருந்திருந்தால் மணப்பெண் அலங்காரம் மறுக்கப்பட வேண்டியதே ஆனால்நடைபெற்றதென்ன? எனவே மணப்பெண் அலங்காரம் கண்டிக்கப்படுவதும், அழகு ராணிப் போட்டியுடன் ஒப்பிடுவதும் அசட்டுத்தனமானதே, அடுத்துப் பரத நாட்டியம், கதகளிகும்மி ஆடும் போது அசையாத அங்கங்கள் உண்டா? வளைந்து, நெளிந்து, குலுக்கி ஆடும் இந் நடனங்களை விட மேலைத்தேய நடனம் எந்தவகையில் ஆபாசமாக இருந்தது? அந்தசிரமமான நடனத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்திய போது பாராட்டாத புத்திஜீவிகளே இல்லை. இந் நடத்தை அசட்டுத்தனம் என்றவர் உலகமறியாதவரா? என்றும் எம் மக்கள் பரதம் கும்மி, கோலாட்டம் நாட்டுக் கூத்து என்பனவற்றையே மேடையேற்றுகின்றனர். கலாசாரமாம் நடைமுறையில் மட்டும் மேல் நாட்டு கலாசாரத்தைப் பின்பற்றலாமா? சமுகம் திருந்த நல்லகருத்துக்களை நிச்சயம்எழுத வேண்டும்.குறை கூறுவது தான் சீர்திருத்தம் என்ற சிலரின் கொள்கை கண்டிக்கப் படவேண்டும்! குறை காணுமல் குறை கூறும் எழுத்து எப்படி வரவேற்கப்படலாம்?

பான்ஷயூர் ம. ராஜகுமாரி

## புத்தாண்டைமுன்னிட்டு

# சேமிப்புச் சான்றிதழுக்கு முத்திரை வரிச்சலுகை

புதுவருடத்தை முன்னிட்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கைமாற்றுச் சேமிப்புச் சான்றிதழ்களை இம் மாதம் 1 ம் திகதி முதல் 14 ம் திகதி வரையுள்ள காலப் பகுதியில் எடுத்துக் கொள்பவர்களுக்குரிய முத்திரை வரியைக் கன்னதிட்டி மக்கள் வங்கி ஏற்றுக்கொள்ளவுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் கன்னதிட்டி மக்கள் வங்கியில் கைமாற்றச் சேமிப்புச்சான்றிதழ் பெறுவோரின் முத்திரை வரியையே வங்கி ஏற்று வருமான வரிப்பகுதிக்கு அனுப்பி வைக்கும்.

புதுவருடத்தைமுன்னிட்டே இந்தச் சலுகையை கன்னதிட்டி மக்கள் வங்கி செய்வதாக வங்கி முகாமையாளர் எம். தியாகராசா தெரிவித்தார். (12)

## புதுவருடத்தனறு பொலிஸார் வழிபடுவர்

தமிழ்- சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ் பொலிஸ் நிலயத்தைச் சேர்ந்த பொலிஸார் விசேட பூசை வழிபாட்டை மேற் கொள்ளவுள்ளனர்,

13ம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் இவ் விசேட பூசை நடைபெறுமென யாழ் நகர பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரமழான் சிந்தனைகள்

### சாந்தியை உண்டாக்க

''பேசுவதற்கு முன்பு ஸலாம் சொல்லவேண்டும்'' என அருமை நபி(ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினர்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ''உங்களுக்கிடையில் ஸலாமை பரப்புங்கள் அன்பு அதிகரிக்கும்.''

''ஸலாம் சொல்வதில் யார் முதன்மையாக இருக்கிறார்களோ நிச்சயமாக அவரே மனிதர்களில் நல்லவர்.'' என நபி(ஸல்) அவர்கள் நவின்கின்றார்கள்.

''முஸாபஹா செய்யுங்கள் இந்த முஸாபஹாவானது உங்களுடைய நெஞ்சிலிருந்து கபடத்தை விட்டு தூரமாக்கி வைக்கும்.'' என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை அருளினார்கள்.

## இன்று நாள் எப்படி?

மேடம்: வாக்கு வசீகரம், திடீர்ப்பிரயாணம், வாகன சுகம், உயர்பதவி, எண்ணியது நடக்கும், மாமன் வழியுதவி.

இடபம்: பெரியோராசி, பூமிப்பேறு, புகழ் தேடிவரும், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மிதுனம்: உயர்பதவி, சகோதர வழியுதவி, வாக்குப்பலிதம், வாகனசுகம், கடற்தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

கடகம்: பணவரவு, புதுத்தொழில், கல்வியால் மகிழ்ச்சி, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், உயர்பதவி.

சிங்கம்: மனக்கிலேசம், வாகன சுகம், எண்ணியது நடக்கும், விவாகத்தடை, தேடியவர் வருகை.

கன்னி: பொருள் நஷ்டம், இடப்பிரிவு, தூரதேசம் போனவர்கள் வருகை, வணிகர்கள் இலாபம்.

துலாம்: வாகனமாற்றம், உயர்பதவி, தெய்வ ஆசி, தேடிய பணம் கிடைக்கும், மாமன் வழியுதவி.

விருச்சிகம்: விவாக நிச்சயம், இனசன மகிழ்ச்சி, விருந்துபசாரம், மூத்த சகோதர வழியுதவி.

தனுசு: புகழ் தேடிவரும், திடீர்ப்பிரயாணம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: உடல் ஒட்டிய ரோகம், பணமுடை, வாசன மாற்றம், தேடியவர் வருகை, புதுத்தொழில்.

கும்பம்: விவாக நிச்சயம், புதுத்தொழில், தூரத்துப்பிரயாணம், வாக்கு வசீகரம், பணவரவு.

மீனம்: சுகஜீவியம், பிரயாண சுகம், பெரியோராசி, புகழ் தேடிவரும், பிதாமாதாவழியுதவி, இராஜமரியாதை, பணவரவு.

யாழ் சோதிடர்
அ. அரியநாயகம்

வவுனியாவில்

## புத்தாண்டை வரவேற்க மக்கள் தயாராகிறார்கள்

புத்தாண்டு வவுனியாவில் களை கட்டி விட்டது பொருட்களை வாங்குவதிலும், புத்தாடை வாங்குதலிலும் மக்கள் மும்மரமாக ஈடுபட்டுள்ளமையை வவுனியாவில் காண முடிந்தது.

பல ஆண்டு இடைவெளிக்குப்பிறகு இப்போது இங்கு அமைதியும் சகசநிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இம்முறையாவது நாம் புத்தாண்டைக் கொண்டாட வேண்டாமா என்று நகருக்குப் பொருட்களைக் கொள்முதல் செய்ய வந்த கிராமவாசி ஒருவர் கூறினர்.

இரவுப் படக்காட்சியும் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இதனையிட்டும் மக்கள் ஆனந்தப்படுகின்றனர்.

(11)

மட்டுவில்

## சாந்தநாயகி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி

மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி மேற்படி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. அதிபர் வே. சண்முகநாதனுடன் பிரதம விருந்தினராக மட்டுவில் கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் சிறப்பு விருந்தினராக திரு. கா. சின்னத்துரை (ஐங்கரன் சனசமூக நிலையத் தலைவர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கேடயங்களும் வெற்றிக் கிண்ணங்களும் பெற்றோர்களாலும், நலன் விரும்பிகளாலும், அன்பளிப்புச் செய்யப்பட்டன. பரிசுகளை திரு. பேரம்பலம் வழங்கினர், அவர் வித்தியாலயத்தின் தனித்துவத்தையும், பெருமையையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

முதலாம் இடத்தைப்பெற்ற பச்சை இல்லம் வெற்றிக் கேடயத்தையும் அஞ்சல் ஓட்டத்துக்குரிய கேடயத்தையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அமைதிப்படை விவகாரம்

# கலைஞருக்கு கல்தா கொடுக்க சட்டத்தில் இடம் உண்டு

சுப்பிரமணியம் சுவாமி

"இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்த கருத்துக்களுக்காக இந்திய அரசியலமைப்பின் கீழ் அவரைப் பதவி நீக்கம் செய்யமுடியும்." என்று ஜனதாக் கட்சித்தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராகத்தெரிவித்த கூற்றுக்களைக் கலைஞர் வாபஸ் பெற்று இந்திய இராணுவத்திற்கு உரிய மதிப்பளிக்காவிட்டால் அரசியலமைப்பின் 356ம் பிரிவின் கீழ் அவரைப் பதவி நீக்க முடியும் எனக் 'குறிப்பிட்ட அவர், கலைஞரைப் பதவி நீக்குமாறு கோருவதற்காக ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமனைத் தான் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கலைஞரின் மேற்படி கூற்றுக்கள் தமிழக சட்டசபையிலும் எதிர்க்கட்சியினர் கிளப்பியுள்ளது தெரிந்தே.

இதேவேளை இலங்கையிலிருந்து இந்தியா திரும்பிய அமைதிப்படையின் கடைசி அணி சென்னை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தபோது வரவேற்பு நிகழ்ச்சியைத் தமிழக அரசு புறக்கணித்தது தொடர்பாக டில்லியில் அரசு வட்டாரங்களில் வியப்புத் தெரிவிக்கப் பட்டது.

அதேசமயம் இந்தியப்படையை வரவேற்க சென்னைக்கு வர பிரதமர் திரு. வி. பி. சிங் திட்டமிட்டிருந்ததாகவும் கலைஞரின் யோசனையின் படி அத்திட்டம் கைவிடப்பட்டதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மூவரின் பற்கள் கழற்றி கோபம் தீர்த்தனர்

சினிமா பார்த்து விட்டுத் திரும்பிய மூவரை தெருவிளக்குக் கம்பத்தில் கட்டி தலா 5 பற்கள் பிடுங்கப்பட்ட சம்பவம் ஒன்றுபற்றி ஆந்திரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்படுகின்றது கோதாவரி மாவட்டத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது இம்மூவரும் தீய மாந்திரிக முறைகளைக் கையாண்டவர்கள் என்ற காரணத்தினால் கிராமப்புற மக்கள் இத்தண்டனை விதித்ததாகத் தெரிகிறது பற்களையிழந்த மூவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் பொலிஸார் இதுவரை இருவரைக் கைது செய்துள்ளனர்.

# ஜனாதிபதி புஷ் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வருவாரா?

நியூயோர்க்கில் எஸ்டேட் ஒன்றை வாங்குவதற்காக பிலிப்பைன்ஸ் அரசாங்கப் பணத்தைச் சூறையாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் தனது சார்பில் சாட்சியமளிக்க அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷைக் கேட்பார் என அவரின் வழக்கறிஞர் திரு. ஜெரி ஸ்பென்ஸர் தெரிவித்தார்.

லிபியத் தலைவர் கேர்ணல் கடாபியும் இமெல்டாவும் நண்பர்களாக இருந்த காரணத்தால் கணவர் மார்க்கோஸ் லிபியாவில் முதலீடு செய்யவிருந்தார்.

இது குறித்து 1981ல் விசனமுற்றிருந்த றீகன் நிர்வாகம் லிபியாவில் முதலிடுவதற்குப் பதிலாக அமெரிக்க எஸ்டேட்டை வாங்குமாறு மார்க்கோஸைத் தூண்டுவதற்கு அப்போதைய உப-ஜனாதிபதி திரு. புஷ்ஷைத் தான் பயன்படுத்தியது. எஸ்டேட்டை வாங்கிய விவகாரம் முழுவதும் புஷ்ஷின் யோசனை என்பதால் அவர் சாட்சியமளிக்க அழைக்கப்படுவார் என ஸ்பென்ஸர் நீதிமன்றத்தில் தனது ஆரம்ப வாதத்தின் போது தெரிவித்தார்

## கீரிமலையில் பஸ் நிலையம் இல்லை

நீண்ட காலத்திற்குப் பின் கீரிமலைப் பகுதிக்கு யாத்திரிகர்களும், நீராடுவோரும் பெருந்தொகையாக வருகை தந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கீரிமலை பஸ் நிலையம் குன்றும், குழியுமாக பஸ்கள் தரிக்க முடியாத நிலையில் உள்ளது.

பஸ் நிலையம் என்று சொல்வதற்கு எதுவித சிறிய கொட்டில் தானும் இல்லாமல் தூர்ந்து போன வெளியாகவே இப் பகுதி உள்ளது. (25)

## கூட்டுறவுசங்கம் விசேட ஏற்பாடு

கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கிளை புதுவருடத்தை முன்னிட்டு புதுவருடத் தினத்தன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வைப்பீடு செய்வதற்கு வசதியாக அவர்களது முதலீட்டை ஏற்றுக் கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது என கிளை முகாமையாளர் எம் தியாகராசா தெரிவித்துள்ளார்.

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தம்மிடமுள்ள பணத்தை வைப்பீடு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவே புதுவருடத் தினத்தன்று முதலீட்டை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்துள்ளதாகவும் முகாமையாளர் எம். தியாகராசா மேலும் தெரிவித்தார். (12)

## வைத்தியர்கள் இல்லாத வைத்தியசாலைகள்

வட்டுக்கோட்டைத் தொகுதி அரசினர் வைத்தியசாலைகளில் எம் பி பி. எஸ். டாக்டர்கள் எவரும் இல்லை. உதவி வைத்திய அதிகாரிகளே பொறுப்பதிகாரிகளாகக் கடமையாற்றி வருகின்றார்கள்.

இத்தொகுதியில் ஆறு அரசினர் வைத்தியசாலைகள் உள்ளன அவற்றில் தொல்புரம் பாணவெட்டி, வட்டுக்கோட்டை ஆகிய இரண்டு கிராமங்களிலும் இயங்குவன மருந்தகங்களே. சங்கானை, பண்டத்தரிப்பு, கொட்டைக்காடு, காரைநகர் அரசினர் வைத்தியசாலைகளில் மட்டுமே நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறுவர். இந் நான்கு வைத்தியசாலைகளில் முன்பு வைத்தியக் கலாநிதிகள் பொறுப்பாக இருக்க உதவி வைத்திய அதிகாரிகளும் உடன் இருந்து கடமையாற்றினார்கள்.

01-03-90ல் காரைநகரில் இருந்த டாக்டர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து வட்டுக்கோட்டைத் தொகுதி அரசினர் வைத்தியசாலைகளில் வைத்திய கலாநிதிகளே இல்லை. அனைத்து அரசினர் வைத்திய சாலைகளிலும் உதவி வைத்திய அதிகாரிகள் பொறுப்பாளர்களாகக் கடமை புரிந்து வருகின்றனர். (37)

## மட்டுநகரில் எரிபொருள் இல்லை; போதியளவு அனுப்பக்கோரிக்கை

மட்டக்களப்பில் தற்போது கடும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது- மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு நான்கு இலட்சத்தி இருபதாயிரம் லீட்டர் எரிபொருள் தேவை. எனினும் கொழும்பில் தற்போது போதியளவு எரிபொருள் இருந்தும் மட்டக்களப்பிற்கு வாரத்திற்கு ஒரு இலட்சம் லீற்றர் எரிபொருள்களே அனுப்பி வைக்கப்படுகிறது.

இது மட்டக்களப்பிற்கான எரிபொருள் தேவையில் நானில் ஒரு பங்கு மட்டுமே. இதனாலேயே இத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் போக்குவரத்துச் சேவைகள் விரைவில் ஸ்தம்பிதமடையலாம் என அஞ்சப்படுகிறது. இதேவேளை விவசாயிகளும் எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து கள்ளச் சந்தையில் அதிக விலை கொடுத்து தமக்குத் தேவையான மண்ணெண்ணை, டீசல் பெற்றுக் கொள்வதாகத் தெரிய வருகிறது போதியளவு எரிபொருளை கொழும்பிலிருந்து உடன் அனுப்பவேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது.

# நாதஸ்வரக் காவலனே! நாதத்தின் நாயகனே!

"காருக்குறிச்சி" எனில் 'நாதக்குறிச்சி" என;
அருணு சலம்புவியை அசைய வைத்தவனும்!
"சிங்கார வேலவனைச்" சினிமாவில் நாதமென'
நம்காதிற் தந்த பெரும் நாதஸ்வரமேதை!

★

இருகரம்; விரல்க ளாடி;
இதழ்களுங் குவிந்து ஆடி;
தருகிற ஓசை நாதம்;
தமிழிசை வேதமாகும்!
ஒருவித ராக யர்கம்,
உன்னிடம் உதயமாகி'
வருகிற போது நெஞ்சம்,
வானிலே போடும் மஞ்சம்!

— பாரதிசிலன்

இன்று பிரபல "நாதஸ்வர மேதை" காருக்குறிச்சி அருணுசலம்பிள்ளை அவர்களின் நினைவுத்தினமாகும் (06.04.1990)

# "நிதர்சனம்" வளர்ச்சிக்கு ஆதரவு தேவை - பரதன்

நிதர்சனம் தொலைக்காட்சியின் வளர்ச்சிக்கு சகல கலைஞர்களும், பொதுமக்களும் ஆதரவு தரவேண்டும். இலைமறைகாயாக உள்ள கலைஞர்கள் நிதர்சனம் மூலம் முன்னேற்றமடையமுடியும்.

இவ்வாறு நேற்றுமாலை நிதர்சனம் தொலைக்காட்சி சேவையின் தலைமையலுவலகத்தில் நடைபெற்ற கலைஞர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் கலந்து கொண்ட கலந்துரையாடலில்; நிதர்சனபொறுப்பாளர் திரு இ பரதன் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்.

இதித் தொலைக்காட்சிச் சேவையில் தரமான நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு துறையிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் மூலமே நிகழ்ச்சிகள் தெரிவு செய்யப்படும் என்றூர்.

மேலும் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பலர் தமது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவித்தனர். இதேவேளை இத்தொலைக்காட்சிச் சேவைக்குரிய இயந்திரங்கள் இங்குவந்துசேர்ந்தவுடன்உடனடியாக இச்சேவை ஆரம்பமாகவுள்ளதெனதெரியவருகின்றது.

அத்துடன் முதலில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மட்டுமே இச்சேவையை தெளிவாக பார்க்கக்கூடியதாகமேற்கொள்ளபடவுள்ளாகவும் அதன்பின்னரே மற்றையபகுதிகளுக்கு இச்சேவை விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (03)

யாழ். மாவட்டத்தில்

# மரண நிவாரணப்பெற விண்ணப்பித்தவர்கள் பொய்யான தகவல்கள் கொடுத்துள்ளனர்

1983-ம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற வன்செயல்களில் மரணமடைந்தவர்களின்குடும்பங்கள் சில, பொய்யான தகவல்களைக் கொடுத்து யாழ் மாவட்ட செயலகத்தில் பதிந்துள்ளதாக தெரியவந்துள்ளது

வன்செயல்களின்போது மரணமடையாமல் இயற்கையாக மரணமடைந்தவர்கள் பலர் களவாக இறப்பு பதிவுப் பதிரம் பெற்றுள்ள்தாக மேலும் தெரியவந்துள்ளது.

மரணமடைந்தவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள்யாவும் கடும் சோதனைக்குட படுத்தப்பட்டே தெரிவுசெய்யப்பட்டுள்ளன, சந்தேகம்உள்ள விண்ணப்பங்கள் மேலதிக சோதனைக்காக நிறுத்தப்பட்டுள்ளனதாக தெரியவருகின்றது (03)

அன்னை பூபதி நினைவாக

# மட்டகளப்பில் நாளை மரதன் ஓட்டப்போட்டி

அன்னை பூபதியின் இரண்டாவது தினத்தைமுன்னிட்டு மட்டக்களப்பில் நாளை சனிக்கிழமைமரதன்ஒட்டப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

விடுதலைப்புலிகளின் அம்பாறை மட்டக்களப்பு மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 26 கிலோ மீட்டர்மரதன் ஒட்டப்போட்டியில்ஐந்நூறு விடுதலைப்புலிகள் கலந்து கொள்வார்கள்,

கிரான் பிள்ளையார் ஆலயத்திலிருந்து புறப்படும் மரதன் ஒட்டம்வெபர் அரங்கில்முடியும் எனதெரிவிக்கப்படுகிறது இப்போட்டியை மட்டக்களப்பு அம்பாறைபிராந்திய தளபதி கருணு ஆரம்பித்து வைப்பார்.

# ஒய்வூதியம் அடுத்த வாரம்

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு ஒய்வூதிய வவுச்சர்கள் வந்ததையடுத்து ஒய்வூதிய கொடுப்பனவுவேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் ஒய்வூதியம் பெறுபவர்கள் ஒய்வூதியத்தை பெறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்தை முன்னிட்டே ஒய்வூதியம் இம்மாத ஆரம்பத்தில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (03)

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும்

# இலவச ரயில் பயண டிக்கெட் கறுப்புச் சந்தையில் விற்பனை

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் இலவச ரயில் பயணச் சீட்டுக்கள் கைமாறப்பட்டுவருவதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பாக இலங்கையின் பல பாகங்களிலும் பல அரச ஊழியர்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரகஸியமாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள் என அறிய வருகின்றது. இந்த இலவச ரயில் பயணச் சீட்டுக்களைபெற்றுவெளியில் விற்பனை செய்து வருவதாகவும் ஆள்மாருட்டம்செய்து பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரியவருகின்றது. (03)

# யாழ். புகையிரத நிலையத்தில் பயணிகள் மிகச்சிரமம்

யாழ். புகையிரத நிலையம் புனரமைப்பு செய்யப்படாமலுள்ளதால் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப் புகையிரத நிலையத்திற்கான ஒலி பெருக்கிகள் மணிக்கூடுகள் தளபாடங்கள் போன்றவைகள் இங்கு அனுப்பிவைப்பதாக இருந்தும் இதுவரை இவை இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இது குறித்த யாழ் புகையிரத நிலைய அதிபர் திரு, மயில்வாகனம் ரயில்வே திணைக்களத்தின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். (03)

# கலை கலாச்சார பிரிவு கிளிநொச்சியில் எழுச்சி விழா

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலாசாரப்பிரிவின் கிளிநொச்சி மாவட்ட கலை, கலாசார அவை அன்னை பூவதி நினைவாக நடாத்தும் மாபெரும் எழுச்சி விழா கிளிநொச்சி மருதடி மைதானத்தில் நடைபெறவுள்ளது. 12, 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறும். இவ்விழாவில் உரையரங்கு, பட்டிமன்றம், இசையரங்கு, நாடக அரங்கு, கவியரங்கு, நடன அரங்கு ஆகியவற்றுடன் அலங்கார ஊர்திபவனியும் இடம் பெறும்.

## விடுதலைப்...

வடக்கு கிழக்கில் தற்போது சிவில் நிர்வாகம் சிராக நடைபெறுகிறது என்றூர்.

விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் பேச்சுக்களை நடாத்துவார்களா எனக் கேட்கப்பட்டபோது, இந்தியாவுடன் எவரும் பேச்சு நடாத்த முடியும் ஆனல் எதைப்பற்றி பேச்சு நடாத்துவது என்பதே முக்கியம்' என்றூர்.

இது இவ்வாறு இருக்க, தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக் குழு ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸவுடனுன பேச்சுவார்த்தைகளை இவ் வாரம் தொடர்ந்து நடத்தவுள்ளது.

இக் குழுவில், விடுதலைப் புலிகள் மககள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் திரு, யோகரத்தினம் யோகி. அரசியல் தலைவர் திரு. அன்ரன்பாலசிங்கம் ஆகியோர் இடம்பெறுவர்.

திருத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறுவது தரத்தை நீக்க வேண்டுமென்று தம் நிலைப்பாட்டை இத் தூதுக்குழுவினர் ஜனதிபதியிடம் மீண்டும் வற்புறுத்திநிற்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உடுவில் உ.அ.அ...

1119 குடும்பங்களுக்கு 7-ம் திகதியும் ஏழாலை மேற்கைச் சேர்ந்த 874 குடும்பங்களுக்கு 8-ம் திகதியும், புன்னுலைக்கட்டுவனைச் சேர்ந்த 1267 குடும்பங்களுக்கு 9-ம் திகதியும் மேற்படி கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

## அரசை...

அரசசொத்துக்கள். இவற்றை வெளியார் வைத்திருப்பது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும் என்றும் சொன்னூர் அவர்.

இவ்வாறு இலாப நோக்கில் வாகன விற்பனையில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சுதந்திர...

மக்கள் எவ்வித அச்சமுமின்றி தமது சுதந்திரமான கருத்துக்களையும் குறைகளையும் தயக்கமின்றி அபிப்பிராயபெட்டிகளில் இடுமாறு மேலும் அவர் தெரிவித்தார்.

இவ் அபிப்பிராயப் பெட்டிகள் தமிழ்ப்பகுதிகளின் சகல இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (03)

கிளிநொச்சி மாவட்டத்தில்

# விளையாட்டுத்துறை விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத்துறை வெகுவிரைவில் முன்னேற்றப்படுத்தப்படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு, சே. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இதன் மூலம் பயன் பெறவுள்ளன. இக் கழகங்கள் உதைபந்தாட்டத்தில் மட்டுமே கூடுதலான ஆர்வம் காட்டி வருகின்றன

பாட்மின்டன், கிரிக்கெட், போன்ற விளையாட்டுக்களில் கிளிநொச்சி மாவட்டம் பின்தங்கிய நிலையிலே உள்ளது பாடசாலைகளில் கூட இவ் விளையாட்டுகள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. (03)

## ரோஹண விடுதலை...

யின் உள்நாட்டு விடயமும் கூட ஆனல் இவ் விடுதலை தயக்கத்தை தந்தது, என் மகிழ்ச்சியைக் கெடுத்தது. என்று அவர் சொன்னூர்.

## ரூ 3 லட்சம பெறுமதியான...

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு மொகமத்அலி உட்பட பல உயரதிகாரிகள் ஆளுநரிடம் பல குறைபாடுகளை எடுத்துக் கூறினர்.

## லீவு நாளில...

அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை இயன்றளவு நீங்கி வரும். இவவேளையில் ஆசிரியர்கள் படிப்பிப்பதில் பாக்கி வைக்கும் குறையும் நீங்க வேண்டும் என அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

# சுவரொட்டி ஒட்டியவர் பிணையில் விடுதலை

அரசுக்கெதிரானசுவரொட்டிகளைஒட்டியஒன்பதுபல்கலைக்கழக மாணவர்களை கொழும்பு உயர் நீதி மன்றம் தலா ஐயாயிரம் ரூபா பிணையில்விடுவிததுள்ளது இம்மாணவர்களின் வரவு குறித்து பல்கலைக்கழக வரவு குறிப்பில் பதியப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

# சுட்டுக்கொலை

ஜே.வி பியின் மொனருகல மாவட்டத் தலைவர் பாகாப்பு படையினரால் சுட்டுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. வித்திசோமே என்றவரிடமிருந்து சில சட்டவிரோதப் பொருட்களும் கைப்பற்றப்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டது.

நிவாரண விடயத்தில்

# வடமராட்சி கிழக்கு புறக்கணிப்பு எனப்புகார்

தற்போது வழங்கப் பட்டு வரும் உற்பத்தித் திறன் முயற்சிக்கான நன்கொடைப்பணம் 4000 ரூபா வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கு இதுவரை வழங்கப் படவில்லை என மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குடா நாட்டின்ஏனைய பகுதி மக்களுக்கு இப்பணம் வழங்கப்பட்டு வருகிறது மீளக்குடியமர்த்தல் நிவாரணப் பணமான முதற்கட்டஆயிரம் ரூபா பணமும் குடா நாட்டின் ஏனைய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பின்னரே கடசியாகவே வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கு வழங்கப் பட்டதாகவும் தெரியவருகின்றது.

மேலும் இவ்உதவி அரசாங்க பிரிவில் பலருக்கு இன்னமும் முதற் கட்ட ஆயிரம் ரூபா மீளக் குடியமர்தல் பணம் இடைக்க வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (43)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 06-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது